1992 மார்ச் 30]

முற்பகல் 9-40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கி. பாலசுப்பிரமணியன்.

திரு. கி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மகளிருக்கான பாலிடெக்னிக் கல்வி நிலையம் என்னுடைய தொகுதியில் பட்டுக்கோட்டையில் ஆரம்பிப்பதாகச் சொன்னார்கள். அது எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது தொடர்பில்லாத துணைக் கேள்வி.

வினா எண் 382, திரு. ம. சின்னசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

382—

குடும்ப நலத் திட்டம் விரிவுபடுத்துதல்.

*5679—திரு. ம. சின்னசாமி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வீடு தேடிச்சென்று பணிபுரியும் குடும்ப நலத் திட்டம் (Out Reach scheme on family welfare) எத்தனை நகராட்சிகளில் செயல்படுகிறது ?

(ஆ) எல்லா நகராட்சிகளுக்கும் விரிவுபடுத்தும் திட்டம் அரசுக்கு உள்ளதா ?

(இ) அத்திட்டத்தின் மூலம் விவரங்களை சேகரிக்க கணிப்பொறிகள் பயன்படுத்தப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) குடும்ப நலம் மற்றும் (தாய் சேய் நலங்களைப்) புறத் தொண்டாகச் செயல்படுத்தும் நகர மேம்பாட்டுத் திட்டம், 3 மாநகராட்சிகளிலும், 22 நகராட்சிகளிலும் மற்றும் ஒரு நகரியத்திலும் செயல்பட்டு வருகின்றது.

(ஆ) இந்திய அரசின் இப்போதைய கொள்கைக் கிணங்க 1981-ஆம் ஆண்டு மக்கட்தொகைக் கணக்கெடுப் பின்படி 2 இலட்சம் மக்கட்தொகைக்கு மேல் உள்ள பெருநகரங்களுக்கு மட்டுமே இத்திட்டத்தினை விரிவு படுத்தக் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது. எனவே, இத் திட்டத்தினை அனைத்து நகராட்சிகளுக்கும் விரிவுபடுத்தும் திட்டம் இப்போதைக்கு இல்லை.

(இ) கணிப்பொறிகள் ஏதும் பயன்படுத்தப்படுவதில்லை.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டமென்பது குடும்ப நலம் பற்றி கணக்கெடுத்து முறைப்படுத்துகிற நல்ல திட்டமாகும். இந்தத் திட்டம் மத்திய அரசு நிதியுதவியால் செய்யப்படுகிறதா அல்லது மாநில அரசு நிதியால் அமல்படுத்தப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் நிதியுதவியோடு தான் இது செய்யப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மக்கள் ஒரு பெண் அல்லது இரண்டு பெண் குழந்தைகள் பிறப்போடு நிறுத்திக்கொள்வார்களானால் அவர்களுக்கு டெபாசிட்டாக 2,000 ரூபாயும், படிப்பதற்கான நிதியுதவியும் அளிப்பதாக அறிவித்து இருக்கிறார்கள். சுவர்களில் குடும்பக் கட்டுப்பாடு விளம்பரம் எழுதுகிற நேரத்தில் இந்த வாசகங்கள் எழுதுவதற்கும், குடும்பக் கட்டுப்பாடு அட்டைகள் கொடுக்கிற நேரத்தில் அதிலே கூட இந்த வாசகங்களை அச்சிட்டுத் தருவதற்கும் முயற்சிகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது விளம்பரத்திற்கான நல்ல யோசனை. அரசாங்கம் அதுபற்றி ஆலோசிக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண். 383, திரு. ஆர். முருகையா பாண்டியன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

383—

வன விளைச்சல் பொருட்கள் திருட்டு.

*2135—திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி — கட்டபொம்மன் மாவட்டம், மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி முண்டந்துறை, களக்